


மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு மாநில மகளிர் அணி சார்பாக மதுராந்தகத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் க. சுந்தர், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். மாநில மகளிர் அணி துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. அங்கையற்கண்ணி, திருமதி அமுலு, மகளிரணி பிரச்சாரக் குழு செயலாளர்கள் சேலம் சுஜாதா, டாக்டர் மாலதி நாராயணசாமி, ராணி ரவிச்சந்திரன், தேன்மொழி, சமூகவலைத்தள பொறுப்பாளர் யாழினி கலந்துகொண்டு பேசினர். இந்நிகழ்ச்சியில் மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் மகளிர் அணி உறுப்பினர்கள், மகளிர் அணியைச் சார்ந்த பெருந்திரளான மகளிர் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து மல்லை சி.ஏ.சத்யா பிரச்சாரம்!



சென்னை, செப். 24 -

திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

06/10/2026 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம்/ தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் திராவிட வெற்றிக் கழகத்தின் தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் தேர்தல் பணிக் குழு எனது தலைமையில் (மல்லை சி ஏ சத்யா) சுற்றுப் பயணம்

26/09/2026 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் மதுராந்தகம் பொதுக்கூட்டம்

27/09/2026 ஞாயிற்றுக் கிழமை அச்சிறு பாக்கம் பேரூராட்சி/ஒன்றியம்

28.09.2026- திங்கட்கிழமை மதுராந்தகம் வடக்கு ஒன்றியம்

29.09.2026 - செவ்வாய்க்கிழமை அச்சிறு பாக்கம் வடக்கு ஒன்றியம்

30.09.2026 - புதன் கிழமை தாராபுரம்

01.10.2026 -வியாழக் கிழமை தாராபுரம்

02.10.2026 - வெள்ளிக் கிழமை மதுராந்தகம் தெற்கு ஒன்றியம்

03.10.2026 - சனிக்கிழமை அச்சிறு பாக்கம் தெற்கு ஒன்றியம்

04.10.2026 - ஞாயிற்றுக்கிழமை இருசக்கர வாகனப் பிரச்சாரம் மாமண்டூரில் தொடங்கி கருங்குழி பேரூராட்சி/ மதுராந்தகம் நகரம்/அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் மாலை 05 மணி பிரச்சாரம் நிறைவு.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்ட மன்ற தொகுதி தேர்தல் பணிக் குழு நிர்வாகிகள் மேற் கண்டவாறு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கள் சேகரிக்கும் பணிகளை திமுக தேர்தல் பணிக்குழு நிர்வாகிகளு டன் கலந்து பேசி ஒருங்கிணைத்திட அன்புடன் வேண்டுகின்றேன்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இந்தியத் தேர்தல் ஆணையர்களிடையே முரண்பாடு:

# தன்னிச்சையாக செயல்படும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்!

## எஸ்.ஐ.ஆர். – முடிவில் 14 முறை குற்றச்சாட்டு கூறிய இரு ஆணையர்கள்!

புதுடெல்லி, செப். 24 –

இந்திய அரசியல் வரலாற்றில் முதல்முறையாக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு உள்ளேயே கடுமையான மோதல் ஏற்பட்டு உள்ளது.

SIR குறித்து தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் எடுக்கப்பட்டதாக, தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த 10 மாதங்களில் 14 முறை இதற்கான எதிர்ப்பை பதிவு செய்ததாக பரபரப்புத் தகவல் வெளியாகி உள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், கேபினட் செயலாளருக்கு இவர்கள் அனுப்பிய 14 கடிதங்களை ஆய்வு செய்ததில் இந்த மோதல் அம்பலமாகி உள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டு உள்ளது. புதிய வாக்காளர்கள் சேர்க்கை, பெயர் நீக்கம் மற்றும் FORM 6ல் செய்த மாற்றங்கள் ஆகியவை தங்களுக்குத் தெரிவிக்கப்படாமல் தன்னிச்சையாக, சட்டவிரோதமாக எடுக்கப்பட்டவை என இவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் நடத்திய புலனாய்வு விசாரணையில், கடந்த 10 மாதங்களில் தேர்தல் ஆணையத்தின் இரண்டு தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகிய இருவரும் அதிகாரப்பூர்வமாக குறைந்தபட்சம் 14 முறை தங்கள் எதிர்ப்பு கடிதங்களை பதிவு செய்திருப்பது அம்பலமாகியுள்ளது. ஒரே நாளில் மட்டும் 4 முறை ஆட்சேபனை கடிதங்கள் அனுப்பப்பட்ட சம்பவங்களும் இதில் அடங்கும்.

வாக்காளர் பட்டியலைச் சீரமைக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட 'தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி' (Special Intensive Revision SIR) நடவடிக்கைகளில் தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் எடுக்கப்படுவதாகவும், தங்கள் ஆலோசனைகளை மீறி சட்டவிரோதமான நடைமுறைகள் புகுத்தப்படுவதாகவும் இருவரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

### 13 கோடி வாக்காளர்கள் நீக்கம்: வெடித்த விவாதம்!

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பீகாரில் தொடங்கப்பட்ட இந்த தீவிர வாக்காளர் திருத்தப் பணி (SIR), பிறகு நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. பொதுவாக வாக்காளர் பட்டியலில் உள்ள போலிப் பெயர்கள், இறந்தவர்கள் மற்றும் ஊர் மாறிச் சென்றவர்களின் பெயர்களை நீக்குவது வழக்கம். ஆனால், இந்த நடவடிக்கையின் மூலம் 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வரைவு வாக்காளர் பட்டியலிலிருந்து சுமார் 13 கோடிக்கும் அதிகமான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டில் யார் வாக்களிக்க வேண்டும், யார் வாக்களிக்கக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணையம், இத்தனை கோடி பெயர்களை நீக்கியது நாடு தழுவிய அளவில் மிகப்பெரிய விவாதத்தை ஏற்படுத்தியது. இந்த ஒட்டுமொத்தப் பணியும் மூன்று ஆணையர்களின் மேற்பார்வையில் நடப்பதாக வெளியே காட்டப்பட்டாலும், ஆணையத்தின் உள்ளே தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் எடுக்கும் முடிவுகளுக்கு மற்ற இரண்டு ஆணையர்களான சாந்து மற்றும் ஜோஷி ஆகியோர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.

### தேர்தல் ஆணையத்தின் கட்டமைப்பு மற்றும் 2023 சட்டம் சொல்வது என்ன?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 324வது பிரிவின்படி தேர்தல் ஆணையம் செயல்படுகிறது. இதில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஒருவரும், இரண்டு தேர்தல் ஆணையர்களும் இருப்பார்கள். சட்டப்படி மூவருமே சமமான அந்தஸ்து கொண்டவர்கள்.. தலைமைத் தேர்தல் ஆணையர் என்பவர் சமமான பவர் கொண்டவர்களில் முதன்மையானவர் மட்டுமே தவிர, தனிச்சையாக சர்வாதிகார முடிவுகளை எடுக்க அவருக்கு அதிகாரம் கிடையாது.

2023 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்தின் பிரிவு 18ன் படி:

1. ஆணையத்தின் அனைத்து அலுவல்சார் நடவடிக்கைகளும், முடிவுகளும் முடிந்தவரை ஒருமனதாகவே எடுக்கப்பட வேண்டும்.

2. ஒருவேளை கருத்து வேறுபாடு ஏற்பட்டால், பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட வேண்டும்.

3. ஆணையத்தின் செயல்பாட்டு விதிகள் மற்றும் வேலைப் பகிர்வுகளை மாற்றியமைக்க வேண்டும் என்றாலும், அதற்கு மூன்று ஆணையர்களின் ஒருமனதான ஒப்புதல் அவசியம்.

ஆனால், இந்த விதிகள் மீறப்படுவதாக ஏப்ரல் 16 அன்று சுக்பீர் சிங் சாந்து அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார். அதில், தேர்தல் ஆணையத்தின் 3 அதிகாரிகளின் ஒருமித்த ஒப்புதல் இன்றியே பல சுற்றறிக்கைகளும் உத்தரவுகளும் ஆணையத்தின் பெயரில் வெளியிடப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டினார். அடுத்த எட்டு நாட்களில், ஏப்ரல் 24 அன்று விவேக் ஜோஷியும் இதே விவகாரத்தை எழுப்பி, அரசியலமைப்புப் பிரிவு 324 மற்றும் 2023 சட்ட விதிகளின்படி ஆணையத்தின் முழு ஒப்புதல் இல்லாமல் எந்த அறிவிப்பும் வெளியாகக் கூடாது என்று கண்டிப்புடன் தெரிவித்தார்.

### இரண்டு ஆணையர்கள் எழுப்பிய 4 முக்கியப் புகார்கள்!

ஆணையர்கள் சாந்து மற்றும் ஜோஷி எழுப்பிய 14 ஆட்சேபனைகளும் தேர்தல் ஆணையத்தின் மிக முக்கியமான நான்கு அடிப்படைப் பணிகளை மையமாகக் கொண்டுள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட மூன்று தேர்தல் ஆணையர்களில், பெரும்பான்மையான இரண்டு ஆணையர்களின் கருத்துகள் புறக்கணிக்கப்பட்டு, தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப்பட்டு வந்ததாக எழுந்துள்ள இந்தக் குற்றச்சாட்டுகள், இந்திய ஜனநாயகத்தின் தூணாக விளங்கும் தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை மீது மிகப்பெரிய கேள்விகளை எழுப்பி உள்ளன. தேர்தல் ஆணைய வட்டாரங்கள் அனைத்து முடிவுகளும் ஒருமனதாகவே எடுக்கப்பட்டு வருவதாக வெளியே செய்திகள் வந்தாலும்.. அவை எல்லாம் பொய் என்பது தற்போது தெரிய வந்துள்ளது. இந்த கடிதங்கள் மூலம் தேர்தல் ஆணையத்தில் ஆல் இஸ் நாட் வெல் என்பது தெரிய வந்துள்ளது!




தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் கிழக்கு ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், ஒன்றிய கழகப் பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா. சேமலையப்பன் உள்பட தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; தினமலரில் அந்துமணி பதில்களில் த.வெ.க. அரசை கண்மூடித்தனமாக ஆதரித்தும், தி.மு.க.வை கடுமையாக எதிர்த்தும் தினம் தினம் வருகிறதே... பார்த்தியா...?

**போண்டி :** **ஆமாய்யா; பார்த்தேன். அந்துமணி தினமலரையே ஒழுங்காகப் படிப்பதில்லை போல் தெரிகிறது. அதுவும் டீக்கடை பெஞ்ச்சை படிப்பதே இல்லை போல் தெரிகிறது. அதனால்தான் த.வெ.க. அரசின் லட்சணம் தெரியாமல் உளறுகிறார் 'அந்துமணி'.**

## புதிய தலைமைச் செயலகத்துக்கு எதிர்ப்பு!

# செப்.29-ல் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

*சென்னை,செப்.24-*

*புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் அரசாணையை ரத்து செய்யக் கோரி, வரும் செப். 29 ஆம் தேதி மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தை அறிவித்துள்ளனர்.*

*தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலகம் ரூ. 1,200 கோடியில் சென்னை பட்டினப்பாக்கத்தில் அமைக்கப் போவதாக த.வெ.க. அரசு அறிவித்துள்ளது. இதற்கான முதல் கட்ட அனுமதியை அளித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*அப்பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் அங்கு ஏற்கெனவே கூட்ட நெரிசல் இருக்கும் நிலையில், மேலும் போக்குவரத்து பாதிக்கப்படும் எனவும் கூறி அரசின் இந்த முடிவுக்கு பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.*

*பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் அமைக்கும் இந்த முடிவை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தவெக கூட்டணியில் உள்ள கட்சிகளே கோரிக்கை விடுத்துள்ளன.*

*இந்த நிலையில், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் அரசாணையை ரத்து செய்யக் கோரி, வரும் செப்டம்பர் 29 ஆம் தேதி சென்னை மாவட்ட மீனவர்கள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர்.*

*இந்த அறிவிப்பை முள்ளிக்குப்பம், முள்ளிமா நகர், மயிலை பகுதி அனைத்து மீனவ கிராம பஞ்சாயத்து சபை நேற்று அறிவித்துள்ளது.*

## மதச்சார்பின்மைக்கு முரணான

# 'வந்தேமாதரம்' பாடலை முழுவதும் பாடாவிட்டால் தண்டனை விதிக்கக்கூடாது!

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

*கர்நாடகா, செப். 24 -*

*வந்தே மாதரம் பாடலை முழுமை யாகப் பாடாவிட்டால் தண்டனை விதிக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.*

*வந்தே மாதம் பாடலின் ஆறு சரணங்களையும் கட்டாயம் பாட வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு பிறப்பித்த சுற்றறிக்கை மற்றும் அப்பாடலுக்குத் தேசிய கீதத்துக்கு இணையான அந்தஸ்து வழங்கும் சமீபத்திய சட்டத் திருத்தத்தை எதிர்த்து கர்நாடக இசைப் பாடகர் டி.எம். கிருஷ்ணா உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.*

*அவர் தாக்கல் செய்த மனுவில், வந்தே மாதரம் பாடலின் முதல் நான்கு சரணங்கள் இந்து தெய்வங்களை உணர்வை வெளிப்படையாக வலியுறுத்துகின்றன.*

*எனவே, அப்பகுதிகளைக் கட்டா யம் பாட வேண்டும் என்று உத்தரவிடுவது நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு முரணானது என்று மனுவில் தெரிவித்திருந்தார்.*

*இந்த மனுவை மூத்த வழக்குரைஞர் தாக்கல் செய்தார்.*

*வந்தே மாதரம் ஆறு சரணங்களையும் பாடுவதைக் கட்டாயமாக்கும் தண்டனைச் சட்டத்தை எதிர்த்து கர்நாடக இசைப் பாடகர் டி.எம். கிருஷ்ணா தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, வந்தே மாதரம் பாடலை முழுமையாகப் பாடாவிட்டால் தண்டனை விதிக்கக் கூடாது,*

*தண்டனை என்பதை மாற்ற அடிப்படை உரிமை விதியின் கீழ் பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்து கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா தொடர்ந்த வழக்கில் ஒன்றிய அரசு உரிய விளக்கம் அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

